கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

முன்னிலை - திருமதி.V.திலகம், பி.ஏ., பி,எல்.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
பெரியகுளம்.

2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் நாள் புதன்கிழமை

மேல்முறையீட்டு வழக்கு எண் 36/2019

1. வி.பி.மலைச்சாமி
2. எம்.ஜெயலட்சுமி .... மேல்முறையீட்டாளர்கள்/ 4, 5 பிரதிவாதிகள்

- எதிர் -

1. பிச்சையம்மாள்
2. முருகன்
3. முனியாண்டி
4. பால்பாண்டி
5. நாகம்மாள்
6. சேவுகப்பாண்டி
7. தங்கம்
8. முத்துப்பாண்டி
9. சேவுகப்பெருமாள்
10. பாண்டிச்செல்வி .... 1 to 11 எதிர்மனுதாரர்கள் /
11. பேச்சியம்மாள் 1 to 11 வாதிகள்

12. ஜமீலாதாஸ்
13. மஸூதா மீரா ஜாகிப் .... 12 to 14 எதிர்மனுதாரர்கள் /
14. ஜரினா அஸரப் 1 to 3 பிரதிவாதிகள்

(பெரியகுளம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 69/2017ல் 30.08.2019ம் தேதி வழங்கிய தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையின் மீது முன்னிடப்படும் மேல்முறையீடு)

விசாரணை நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 69/2017

1. பிச்சையம்மாள்
2. முருகன்
3. முனியாண்டி
4. பால்பாண்டி
5. நாகம்மாள்
6. சேவுகப்பாண்டி
7. தங்கம்
8. முத்துப்பாண்டி
9. சேவுகப்பெருமாள்
10. பாண்டிச்செல்வி
11. பேச்சியம்மாள் .... 1 to 11 வாதிகள்

- எதிர் -

1. ஜமீலாதாஸ்
2. மசுதா மீரா ஜாகிப்
3. ஜரினா அஸரப்
4. வி.பி.மலைச்சாமி
5. எம்.ஜெயலட்சுமி .... பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீடு என் முன்பாக 23.12.2020ம் தேதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.முத்துச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 12 முதல் 14 எதிர்மனுதாரர்களுக்கு மேல்முறையீட்டாளர்கள் தொடர்ந்து படிமெமோ செலுத்தாததாலும், மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் யாரும் ஆஜரில்லாததாலும், மேல்முறையீட்டாளர்கள் அழைத்தும் ஆஜரில்லாததாலும் இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

## தீர்ப்புரை

### கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் விவரம்

வழக்கு சொத்து வாதிகளின் முழுமையான சொத்து என்றும், அதன் விளைவாக வாதிகள் வசம் மீட்பது மற்றும் செலவுக்கான நிவாரணம் கேட்டும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### கீழமை நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட பரிகாரம்

முடிவாக இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. வழக்கு சொத்து என்பது வாதிகளின் முழுமையான சொத்து என்று அறிவிக்கப்பட்டு, தீர்ப்பளிக்கப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் வழக்குச் சொத்தை வழங்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடப்பட்டது. செலவு தொகை என எந்த உத்தரவும் இல்லை.

### மேல்முறையீட்டு வழக்கில் கேட்கப்பட்ட பரிகாரம்

இந்த மேல்முறையீட்டு வழக்கினை மேல்முறையீட்டாளர்களின் செலவு தொகையுடன் அனுமதித்தும், 30.08.2019ம் தேதி பெரியகுளம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 69/2017ல் பிறப்புவிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து தீர்ப்பு செய்ய வேணுமாய் மேல்முறையீட்டாளரால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் யாரும் ஆஜரில்லாததாலும், மேல்முறையீட்டாளர்கள் அழைத்தும் ஆஜரில்லாததாலும், தொடர்ந்து 12 முதல் 14 எதிர்மனுதாரர்களுக்கு மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் படிமெமோ செலுத்தாததாலும், இந்த மேல்முறையீடு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2020ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23ம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) வி.திலகம்
23.12.2020
கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி,
பெரியகுளம்.

கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி,
பெரியகுளம்.

மேல்முறையீட்டு வழக்கு
எண் 36/2019

தீர்ப்புரை நாள் 23.12.2020